# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


நாள்: **29.06.2021**

**பெறுநர்**

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை- 600 009

**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : மின்வாரியத்தில் 40,000-க்கும் மேற்பட்ட ஆரம்பநிலை காலிப்பணியிடங்களை நிரப்பி தடையில்லாத தரமான மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க - கோருவது தொடர்பாக**

மின்வாரியத்தில் ஆரம்பநிலை காலிப்பணியிடங்கள் 40,000-க்கும் மேற்பட்டு இருப்பதினால் மின்வாரிய பணிகளில் சுணக்கமும் தடையில்லாத மின்சாரத்தை தருவதில் காலதாமதமும் ஏற்படுகின்றது. சென்னை போன்ற பெருநகரங்களில் மின்சாரத்தை தருவதில் காலதாமதம் ஏற்படுவதால் நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் அவப்பெயர் ஏற்படும் நிலை உருவாகும்.

குறிப்பாக

1. களஉதவியாளர், கம்பியாளர் காலிப்பணியிடங்கள் 25,000,
2. உதவி மின்பொறியாளர் 2,000
3. தொழிற்நுட்ப உதவியாளர் 2,000
4. இளநிலை உதவியாளர்(நிர்வாகம்) 500
5. இளநிலை உதவியாளர் (கணக்கு) 1,400
6. கணக்கீட்டாளர் 4,000 மற்றும் வரைவாளர் உள்ளிட்ட ஆரம்பகட்ட பதவிகள் காலியாக உள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக களப்பணி உதவியாளர் (FA) 2,900, உதவி மின் பொறியாளர் 575, இளநிலை உதவியாளர் கணக்கு 500, பதவிகள் அறிவிக்கை (Notification) வெளியிடப்பட்டு கொரானா காரணமாக தேர்வு நடத்துகின்ற நிலையில் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. எனவே 40,000-க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் மேலே வாரியம் அறிவித்த பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது மின்தடைகள் தொடர்பாக தமிழகத்தில் விரிவான விவாதங்கள் நடைபெற்று வருகின்றது. தாங்களும் மின்வாரியத்தை சிறப்பாக நடத்திடவும் தடையில்லா மின்சாரத்தை அளித்திடவும் மண்டல வாரியாக பொறியாளர்கள் அதிகாரிகள் கொண்ட கூட்டத்தை கூட்டி விரிவான நடவடிக்கை எடுத்துள்ளது நிர்வாகத்தின் மத்தியில் மிகுந்த வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

**எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து, மின்வாரியத்தின் நலன் பாதுகாக்கவும், தடையில்லா மின்சாரத்தை மின்நுவர்வோருக்கு அளிக்கவும் ஆரம்பநிலை பதவிகளை நிரப்புவதே ஒன்றே நிரந்தர தீர்வாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு அதற்கான உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.**

**நன்றி!**

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

நகல் :

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்